செ.வெ.எண்.35 நாள்.13.10.2017

**திருநெல்வேலி மாவட்டத்தில் நரிக்குறவர்கள் மற்றும் மலைவாழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தும் Project Spark -Inspire & Ignite திட்டத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார். திருநெல்வேலி பேட்டை நரிக்குறவர் காலனி மாணவ, மாணவிகளுடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் பல்வேறு பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டார்.**

-------

திருநெல்வேலி மாவட்டத்தில் நரிக்குறவர், காட்டுநாயக்கர் மற்றும் பல்வேறு மலைவாழ் மக்களின் குடும்பங்கள் உள்ளது. இவர்கள் பொருளாதாரத்தில் பின்தங்கி இருப்பதோடு, கல்வியில் மிகவும் பின்தங்கி உள்ளனர். குறிப்பாக 8ம் வகுப்பு வரை மட்டுமே கல்வி பயிலுகின்றனர். சுகாதார பழக்க வழக்கங்களிலும் பின்தங்கியே உள்ளனர். இளம்வயது திருமணங்களையும் ஆதரித்து வருகின்றனர். இக்குடும்பங்களை பொருளாதார ரீதியில் மேம்படுத்திட தேவையான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், அரசு திட்டங்களை கொண்டு சேர்த்தல் போன்றவைகள் செய்யப்பட்டு வருகிறது. சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு ஓட்டுநர் உரிமம், குடும்ப அட்டை, ஆதார் அட்டை வழங்குதல் உள்ளிட்ட பணிகள் செய்யப்பட்டுள்ளது. மேலும், இவர்களின் குடியிருப்பு பகுதிகளில் பள்ளிக் கல்வியை முழுமையாக தொடர்ந்திட உண்டு உறைவிட பள்ளிகள் அமைக்கும் நீண்டகால திட்டங்களும் செயல்படுத்தவுள்ளது. இவர்களின் கல்வியை மேம்படுத்துதல், உயர்கல்வி பெறும்வரை ஊக்கப்படுத்துதல், இளம்வயது திருமணங்களை தடுத்தல் போன்ற விழிப்புணர்வுகளை ஏற்படுத்தி வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தும் வகையில் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் Project Spark - Inspire & Ignite திட்டத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் உருவாக்கியுள்ளார்கள்.

அதன் தொடக்கமாக, நரிக்குறவர் இன மாணவ, மாணவிகளுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் **''மாவட்ட ஆட்சியருடன் ஒரு நாள்''** என்ற நிகழ்வு இன்று (13.10.2017) நடைபெற்றது. திருநெல்வேலி பேட்டை நரிக்குறவர் காலனி தேசிய குழந்தை தொழிலாளர் திட்டப் பள்ளியில் பயிலும் மாணவ, மாணவிகள் காலை 10.00 மணிக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு வந்திருந்தனர். மாவட்ட ஆட்சியர் அறையில், மாவட்ட ஆட்சியரை சந்தித்து வாழ்த்து பெற்றனர். தொடர்ந்து, மாவட்ட ஆட்சியர் அலுவலத்தில் நடைபெற்ற பேரிடர் மேலாண்மை கையெழுத்து இயக்கம், அங்கன்வாடி பணியாளர்களுக்கான பயிற்சி கூட்டம் ஆகிய கூட்டங்களில் கலந்து கொண்டனர். பாளையங்கோட்டை ஒன்றியம், கீழநத்தம் ஊராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் தூய்மை பணிகள் ஆய்வு, ரெட்டியார்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற உலக கை கழுவும் தினம் உள்ளிட்ட நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டனர். மாவட்ட ஆட்சியர் அவர்களுடன் மதிய உணவிற்கு பிறகு, உதவி ஆட்சியர் (பயிற்சி), மாவட்ட வருவாய் அலுவலர், கோட்டாட்சியர், பாளையங்கோட்டை வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு சென்று அலுவலக நடைமுறைகளை கேட்டு தெரிந்து கொண்டனர். மாலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் நினைவு பரிசுகள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியை தொடர்ந்து, Project Spark - Inspire & Ignite திட்டத்தின் கீழ், நலிவடைந்த குழந்தைகளை ஊக்கப்படுத்த பல்துறை அலுவலர்கள், தொழில் வல்லுனர்களுடன் இதுபோன்ற நிகழ்வுகள் தொடர்ந்து ஏற்பாடு செய்யப்படவுள்ளது.

இந்நிகழ்ச்சியில், உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.க.இளம்பகவத்,இ.ஆ.ப., தேசிய குழந்தை தொழிலாளர் திட்ட இயக்குநர் திரு.சந்திரகுமார், கள அலுவலர்கள் திரு.ரவீந்திரன், திருமதி.ராஜேஸ்வரி, ஸ்காட் ஒருங்கிணைப்பாளர் திரு.ராஜேஸ், தொழிலாளர் ஆய்வாளர் திரு.ராமகிருஷ்ணன், தொழிலாளர் உதவி ஆய்வாளர் திரு.சபரீசன், கல்வித் துறை, சுகாதாரத்துறை அலுவலர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.